**B-02**

# யாழ்ப்பாணப் பொதுசன நூலக பட்டியலாக்க பதிவுகளின் சரிபார்ப்பு

[1]ஜெயந்தி வினாயகமூர்த்தி, [2]கல்பனா சந்திரசேகர்

[1]யாழ் பொதுசன நூலகம், யாழ்ப்பாணம் [2]நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

**ஆய்வுச்சுருக்கம்**

நூலக பட்டியலானது திருத்தமான முறையில் நூல்விபரத்தகவல்களை கொண்டிருத்தல் அவசியமாகும். ஏனெனில் ஒரு நூலினை இனங்காண்பதற்கும், அந்நூலினைப் பற்றிய விபரத்தை அறிந்து கொள்ளவும், நூலை சரியாக அடையாளப்படுத்தவும், நூலக பட்டியலிலுள்ள பட்டியலாக்க பதிவானது ஒழுங்காகவும், நேர்த்தியானதாகவும் அமைந்து இருத்தல் வேண்டும். இவ் ஆய்வானது யாழ் பொதுசன பிரதான நூலகத்தின் பட்டியலாக்கம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலகத்தின் நூற்சேர்க்கையிலுள்ள 383 நூல்களுக்கான பட்டியல் பதிவுகள் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு, அந்நூல்களின் பட்டியல் பதிவுகளுக்கான சரிபார்ப்பானது மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் ஆசிரியர் பெயர், நூலின் தலைப்பு, பதிப்பு விபரம், வெளியீட்டிடம், வெளியீட்டாளர் விபரம், வெளியிடப்பட்ட ஆண்டு, பக்கவிபரம், தராதர எண், பகுப்பெண், அழைப்பெண் போன்ற விபரங்கள் சரிபார்க்கப்பட்டன. இவ்வாய்வில் இனங்காணப்பட்ட திருத்தங்கள் யாவும் ஒழுங்கமைப்புக்கான திருத்தங்கள், நூலின் உள்ளடக்க திருத்தங்கள், மற்றும் உள்ளீடுகளுக்கான திருத்தங்கள் என வகைப்படுத்தப்பட்டன. ஒழுங்கமைப்புக்கான திருத்தங்கள் தொடர்பில், பட்டியல் பதிவுகளில் தவற விடப்பட்ட குறியீடுகள், மற்றும் தரவுகளுக்கிடையில் பொருத்தமற்ற இடைவெளி காணப்படல் தொடர்பான தவறுகள் கண்டறியப்பட்டன. இவற்றுள் தவறவிடப்பட்ட குறியீடுகளான காற்புள்ளி, முக்காற்புள்ளி, புள்ளி போன்றவை சம்பந்தமான தவறுகள் நூலின் வெளியீட்டாளர் (88.5மூ), வெளியிடப்பட்ட ஆண்டு (72.3மூ), மற்றும் வெளியீட்டிடம் (71.0மூ) தொடர்பான பதிவுகளில் அதிகளவில் காணப்பட்டது. அதேவேளை, இவ்வாறான குறியீடுகளின் தவறானது ஆசிரியர் பெயர் தொடர்பான பதிவுகளில் கணிசமான அளவில் (33.2மூ) காணப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன், தரவுகளுக்கிடையில் பொருத்தமற்ற இடைவெளி காணப்படல் தொடர்பான தவறுகள் ஆசிரியர் பெயர் தொடர்பான பதிவுகளில் மட்டுமே காணப்பட்டது. நூலின் உள்ளடக்க திருத்தங்களுள், தவறவிடப்பட்ட தேவையான பதிவிடம், தவறவிடப்பட்ட பதிவின் பகுதி, பதிவில் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட பகுதி, பதிவிடத்துக்கு பொருத்தமில்லாத விபரம், அழைப்பெண்ணில் பொருத்தமற்ற ஆசிரியர் குறி போன்ற தவறுகள் கண்டறியப்பட்டன. இவற்றுள், தவறவிடப்பட்ட தேவையான பதிவிடம் தொடர்பிலேயே அதிகளவான தவறுகள் பட்டியல் பதிவுகளில் இடம்பெற்றிருந்தன. எனினும், இரண்டு பட்டியல் பதிவுகளின் அழைப்பெண்ணில் மாத்திரமே பொருத்தமற்ற ஆசிரியர் குறியானது அவதானிக்கப்பட்டது. உள்ளீடுகளுக்கான திருத்தங்கள் தொடர்பில், ஆசிரியர் பெயர் தொடர்பான பதிவுகளில் அதிகளவான (13.6மூ) தவறுகளும், நூலின் தலைப்பு மற்றும் அழைப்பெண் போன்றவற்றில் மிகக் குறைந்தளவான (1.0மூ) திருத்தங்களும் காணப்பட்டன. இத்தவறுகள் தொடர்பில் நூலக உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடியபோது, பட்டியலாக்க விதிமுறைகள் தொடர்பில் பரீட்சயமில்லாமை குறியீடுகளின் அவசியம் உணரப்படாமை மற்றும் அவதானமின்மை போன்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டன. எனவே இவ்வாய்வானது, யாழ் பொதுசன பிரதான நூலகத்தின் பட்டியல் பதிவுகளில் காணப்படும் தவறுகளை இனங்காண்பதற்கு உதவியுள்ளது.

மேலும், இப்பட்டியல் பதிவுகளில் காணப்படும் தட்டச்சு தவறுகள், பொருத்தமற்ற மற்றும் முழுமையடையாத விபரங்கள் என்பன தகவல் மீள்பெறுகையில் சிரமங்களையும் நேரவிரயத்தையும் ஏற்படுத்துவதைக் காணலாம். இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட ஒழுங்கமைப்புக்கான திருத்தங்கள், நூலின் உள்ளடக்க திருத்தங்கள், மற்றும் உள்ளீடுகளுக்கான திருத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, நூற்சேர்க்கையிலுள்ள ஆவணங்களுக்கான பட்டியல் பதிவுகளை செம்மைப்படுத்தி, பட்டியலாக்க விதிமுறைகளைப் பின்பற்றி தரநிர்ணயம் செய்வதன் மூலம் தகவல் தேடல் மற்றும் மீள்பெறுகையை இலகுவாகவும் விரைவாகவும் மேற்கொள்ள உதவலாம். இதன் பொருட்டு, பட்டியலாக்கத்தின் முக்கியத்துவம், பட்டியலாக்க விதிமுறைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியம் என்பவற்றை உள்ளடக்கிய பயிற்சி நூலக உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக இவ்வாய்வில் பரிந்துரைக்கப்படுகிறது.

**திறவுச் சொற்கள்** : பட்டியலாக்கம், பட்டியலின் தரம், நூலகப்பட்டியல் - ஆய்வு, நூல் விபரங்கள் - தவறுகள், நூல் பதிவு - திருத்தங்கள்.